உணருகிறேன். அதற்குப் பரிகாரமாக எனது அமைச்சர் பொறுப்பை இராஜிநாமா செய்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-00

அமைச்சர் இராஜிநாமா செய்தது குறித்து நான் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. அதைப்பற்றி கலந்து ஆலோசித்துக்கொண்டிருக்கிறேன். அது ஆய்விலே இருக்கிறது. இதில் முடிவு எடுக்கின்ற அதேநேரத்தில், எப்படி இந்த டேப் விவகாரம், ஒட்டுக்கேட்கிற விவகாரம் நடைபெறுகிறது என்பதை ஆராய, அத்தகைய வேகமானப் பணிகளை நம்முடைய துப்பறியும் இலாகாவின்மூலமாகச் செய்திட, அந்த விசாரணையையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

அடுத்து, இது தொடர்பாக இன்னொரு விசாரணைக் குழுவையும் அல்லது இதே விசாரணைக் குழு இதையும் இணைத்து விசாரிக்கலாமா என்பதையும் யோசித்து நடவடிக்கை எடுக்கப்படும். தவறு செய்தவர்கள் யாரும் மன்னிக்கப்படமாட்டார்கள். அதிலும், இலஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்காக துணைபோவதோ, ஆதரவு அளிப்பதோ பெரும் குற்றம் என்பதை நானும் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உணர்வதைப்போல உணருகிறேன் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த விவகாரத்தில் அடுத்து எடுக்கிற நடவடிக்கைகளை அரசு அவ்வப்போது அறிவிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(ஆ) மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ள நிவாரணப் பணிகள் குறித்தும், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் நிலங்களின் பரப்பளவு குறித்தும், எவ்வளவுபேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரம் குறித்தும், வெள்ள நிவாரணப் பணிகளிலே அவர்களுக்கு நிவாரணம் வழங்குகிறபோது, நில வரியைப் பிடித்த பின்புதான் அந்த நிவாரணம் வழங்கப்படுகிறது என்ற அச்சம் பல இடங்களிலே கூறப்பட்டிருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது குறித்து விரிவான வெள்ளை அறிக்கை ஒன்றினை இந்த அரசு அவைக்கு வைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தி அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், மார்ச் மாதத்திலே பெய்த மழையின்போது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசாங்கத்தினுடைய நிதி நமக்குக் கிடைப்பதற்கு முன்னாலேயே, 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவிகளைச் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அந்த ஆணை பல மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களாலே நிறைவேற்றப்பட்டு வருகிறது. சில இடங்களிலே--மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல--சிலருக்குக் கிடைப்பதில் சில இடையூறுகள் இருப்பதாக இங்கே தெரிவித்தார்கள். இந்த மாதத்திற்குள்ளாக எல்லா மாவட்டங்களிலேயும் நிவாரண உதவிகள், பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் போய்ச் சேரக்கூடியவகையில் இந்த அரசு உரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

(இ) பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் இரத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய அரசு மேல்நிலைக் கல்வி முடித்து அரசுக் கல்லூரிகளுக்குச் செல்கின்ற மாணவர்களுக்கு tuition fees என்று அழைக்கப்படுகின்ற அந்தக் கட்டணத்தில், சலுகையை அறிவித்திருக்கிறது. அதே சலுகை, அரசு பாலிடெக்னிக்குகளில் பயிலக்கூடிய மாணவர்களுக்கும் பொருந்தவேண்டுமென்கிற விருப்பம்,

2008 மே 14] [திரு. என். நன்மாறன்]

அந்த மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இருக்கிறது. அதனையும் நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசு பாலிடெக்னிக்குகளில் tuition கட்டணமாக 2,500 ரூபாயும், சிறப்புக் கட்டணமாக 1,000 ரூபாயும், development charges என்ற அடிப்படையிலே 1,000 ரூபாயும், ஆக மொத்தம் 4,500 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் 4,500 ரூபாய்தான் வசூலிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு, அரசுக் கல்லூரிகளில் படிக்கிற மாணவர்கள் அனைவருக்கும் tuition fees--அந்தக் கட்டணமே இல்லையென்று கலைஞர் அவர்கள் அறிவித்து, அது நடைமுறையில் இருக்கிறது. உங்களுடைய கோரிக்கைகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி, சாத்தியம் இருக்குமானால், வருங்காலங்களில் அதைப்பற்றி முடிவு செய்யப்படும்.

(ஆ) மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மார்ச் மாதம் பெய்த மழையால் ஏற்பட்ட பாதிப்புக்கு வெள்ள நிவாரணம் வழங்குவதுகுறித்து, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு பதிலளித்தார்கள். அவர்கள் எங்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, முந்திரிக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து நாங்கள் நேரடியாக விளக்கினோம். ஆனால், இதுநாள்வரையிலும் பாதிப்புகளைக் கணக்கெடுத்து, எந்த முந்திரி விவசாயிக்கும் எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. அதற்கு நம்முடைய அரசுத் துறைச் செயலாளர்கள், அலுவலர்கள் சொல்கின்ற காரணம், முந்திரியினுடைய பாதிப்பு 50 விழுக்காட்டிற்குமேல் இருந்தால்தான் நிவாரணம் தரமுடியும் என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. அதனால் தரமுடியவில்லை

என்று காரணம் சொல்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் மற்றும் துறையினுடைய செயலாளர் ஆகியோரோடு பேசுகின்றபோது, 40-ல் இருந்து 45 சதவிகிதம் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்ற கருத்தை உள்வாங்கியிருக்கிறார்கள். ஆனால், பாதிக்கப்பட்டுள்ள முந்திரி விவசாயிகளுக்கு நிவாரணமாக நான் ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் தரவேண்டுமென்று கேட்டேன், 10 ஆயிரம் ரூபாய் தர வேண்டுமென்று கேட்டேன். அதைத் தரவில்லையென்று சொன்னாலும்கூட, ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபாயாவது வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டும். அதேபோல், நேற்றையதினம் இரவு 11 மணி அளவில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், போதும். உட்காருங்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மந்திரிகளுக்கு இன்றைக்கு நிறைய மானியங்கள் இருக்கின்றன. ஆகவே, முந்திரியைப்பற்றி இன்னொரு நாள் பேசிக்கொள்ளலாம். (சிரிப்பு)

(ஈ) இராமேஸ்வரம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்கள் கரை திரும்பாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று 15 நாட்களாகியும் இதுவரை கரை திரும்பாததால் ஏற்பட்டுள்ள நிலைகுறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். முதலாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மீனவர்களுடைய இன்றைய நிலை என்னவென்று சொன்னால், "ஒருநாள் போவார், ஒருநாள் வருவார், ஒவ்வொரு நாளும் துயரம்" என்கின்ற அளவுக்கு மீனவர்களுடைய வாழ்க்கை நிலை இருந்துகொண்டிருக்கிறது. கடந்த 12 நாட்களுக்கு முன்பாக, இராமேஸ்வரம் பகுதி, தங்கச்சிமடத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள்,